# தூதன்

தூதன் - 32 அக்டோபர் - 2023 தூது - 9

அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும். யாக்கோபு 1:14, 15




Private Circulation only

தென்னிந்தியத் திருச்சபை, தமிழ் சபை - துபாய்

# தென்னிந்தியத் திருச்சபை
## தமிழ் சபை - துபாய்


| | |
|---|---|
| சபை போதகர் மடல் | 01 |
| ஃபுஜைரா போதகர் மடல் | 05 |
| இராஸ் அல் கைமா போதகர் மடல் | 07 |
| செயலர் மடல் | 09 |
| நீங்கள் கிறிஸ்தவரா | 11 |
| தீர்க்கர் அறிக்கை | 12 |
| திருச்சபை ஜெபநாள் | 13 |
| வேதவினா போட்டி | 16 |
| தெரிந்து கொள்வோம் | 18 |
| Health Tips | 20 |
| Children's Corner | 22 |
| Birthday Celebrants | 25 |
| Wedding Anniversary | 29 |
| ஆராதனை பாடல்கள் | 30 |
| Faithful Servant of God | 31 |



P.O.Box: 8785, Dubai. Mob: 050-5533645
Email: office@csitamilparishdubai.com - Website: www.csitamilparishdubai.com

# சபை போதகர் மடல்

கிறிஸ்துவுக்குள் அன்பான இறைமக்கள் அனைவருக்கும்
என் அன்பின் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

## அறுவடைக்கு ஆயத்தமாகுங்கள் (Get Ready for the Harvest)

நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: நான் உங்களுக்குக் கொடுக்கும் தேசத்தில் நீங்கள் போய்ச் சேர்ந்து, அதின் வெள்ளாண்மையை அறுக்கும்போது, உங்கள் அறுப்பின் முதற்பலனாகிய ஒரு கதிர்க்கட்டை ஆசாரியனிடத்தில் கொண்டுவரக்கடவீர்கள். (லேவியராகமம் 23:10)

என் அன்பிற்குரிய இறைமக்களே,

இந்த அறுப்பின் பண்டிகையின் நோக்கம் என்னவென்றால், இறைமக்களை ஏதாவது ஓரிடத்தில் கூடிவரச் செய்து இணைந்து நம் ஆண்டவரை வழிபட்டு தங்கள் அறுப்பின் முதற்பலனைச் செலுத்த வழிவகுப்பதாகும். இஸ்ரவேலருக்கு கடவுள் கற்றுக் கொடுத்ததும் இதுதான் (யாத்தி. 23:16). நீ வயலில் விதைத்த உன் பயிர் வேலைகளின் முதற்பலனை செலுத்துகிற அறுப்புக்கால பண்டிகையையும், வருஷ முடிவிலே நீ வயலில் உன் வேலைகளின் பலனைச் சேர்த்து தீர்ந்தபோது சேர்ப்புகால பண்டிகையையும் ஆசரிப்பாயாக.

### கர்த்தருடைய பண்டிகை நாட்கள்:

கர்த்தர் நியமித்திருக்கிற பரிசுத்தமான நாட்களைப் பற்றி இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டியது என்னவென்றால்: சபை கூடிவந்து பரிசுத்த நாட்களாக ஆசரிக்கும்படி, நீங்கள் கூறவேண்டிய கர்த்தருடைய பண்டிகை நாட்களாவன (லேவி. 23:1,2) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் ஒருநாளை பரிசுத்தமாய் நியமிக்கும்போது அந்தநாள் பரிசுத்த நாளாகிறது. அவரே நாட்களுக்கும், காலங்களுக்கும் கர்த்தராயிருக்கிறார். கர்த்தர் காலங்களை உண்டாக்கினபோது, ஒரு நாளை மற்ற நாளிலிருந்து பரிசுத்தப்படுத்தி அதை ஆசீர்வதித்திருக்கிறார்.

கர்த்தர் பரிசுத்தமான நாட்களை பண்டிகை நாட்கள் என்று சொல்லுகிறார். பாவ நிவாரண நாளானது ஒரு பண்டிகை நாளாகும். பண்டிகை நாட்கள் பொதுவாக மகிழ்ந்து களிகூறுவதற்கும், சந்தோஷமாயிருப்பதற்கும் நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆகையினால் அந்த பரிசுத்தமான நாட்கள் பண்டிகை நாட்கள் என்று அழைக்கப்படுகிறது.

சபை கூடிவந்து பரிசுத்த நாட்களாக ஆசரிக்கும்படி நீங்கள் கூரவேண்டிய கர்த்தருடைய பண்டிகை நாட்கள் என்று கர்த்தர் சொல்லுகின்றார். இந்த பண்டிகை நாட்கள் "கர்த்தருடைய பண்டிகை நாட்கள்" என்று அழைக்கப்படுகிறது. கர்த்தர் இந்த பரிசுத்த நாட்களை என்னுடைய பண்டிகை நாட்கள் என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய பண்டிகை நாட்களிலே சபையாகக் கூடிவரவேண்டும். இந்த பண்டிகை நாட்களை பரிசுத்த நாட்களாக ஆசரிக்கவேண்டும். பண்டிகை நாட்கள் பரிசுத்தமானது. பண்டிகை நாட்களிலே ஆசரிக்கப்படும் ஒவ்வொரு காரியமும் பரிசுத்தமானதாய் இருக்கவேண்டும்.

### அறுப்பின் முதற்பலனாகிய பண்டிகை (லேவி. 23:9-14)

கர்த்தர் பஸ்கா பண்டிகையின் பிரமாணத்தை இங்கு மறுபடியுமாய் சொல்லுகிறார். முதலாம் மாதம் பதினாலாம் தேதி அந்திநேரமாகிற வேளையிலே கர்த்தரின் பஸ்கா பண்டிகை பரிசுத்தமாய் ஆசரிக்கப்படுகிறது. இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து விடுவிக்கப்பட்ட நாளை நினைவுகூறும் வண்ணமாக பஸ்கா ஆசரிக்கப்படுகிறது.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரின் தலைச்சன் பிள்ளைகளுக்கும், எகிப்தியரின் தலைச்சன் பிள்ளைகளுக்கும் வித்தியாசம் காண்பித்து தம்முடைய கிருபையினால் இஸ்ரவேல் புத்திரரை மறக்கவில்லை. கர்த்தர் தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் அவர்களுக்குக் காண்பித்தார் என்பதற்கு அடையாளமாக பஸ்கா பண்டிகை ஆசரிக்கப்படுகிறது.

கர்த்தர் மோசேயை நோக்கி, நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: நான் உங்களுக்குக் கொடுக்கும் தேசத்தில் நீங்கள் போய்ச் சேர்ந்து, அதின் வெள்ளாண்மையை அறுக்கும்போது, உங்கள் அறுப்பின் முதற்பலனாகிய ஒரு கதிர்க்கட்டை ஆசாரியனிடத்தில் கொண்டுவரக்கடவீர்கள் (லேவி.23:9,10) என்று சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரர் ஆசாரியனிடத்தில் கொண்டுவருகிற கதிர்க்கட்டை கர்த்தர் அங்கீகரிக்கவேண்டும். உங்களுக்காக அது அங்கீகரிக்கப்படும்படி, ஆசாரியன் அந்தக் கதிர்க்கட்டை ஓய்வுநாளுக்கு மறுநாளில் கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்ட வேண்டும் (லேவி.23:11) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஆசாரியன் அறுப்பின் முதற்பலனாகிய கதிர்க்கட்டை கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டுகிறான். பரலோகத்திலுள்ள தேவனுக்கு இந்த கதிர்க்கட்டு காணிக்கையாக சமர்ப்பிக்கப்படுகிறது என்பதற்கு அடையாளமாக ஆசாரியன் இந்த கதிர்க்கட்டை அசைவாட்டுகிறான்.

கர்த்தரே விளைச்சலைக் கொடுக்கிறவர். கர்த்தர் இஸ்ரவேல் தேசத்திலே முன்மாரியையும், பின்மாரியையும் கொடுத்து தானியங்களை வளரச் செய்திருக்கிறார். தங்களுடைய எல்லா ஆசீர்வாதங்களுக்கும் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரையே சார்ந்திருக்கிறார்கள். இதற்கு அடையாளமாக ஆசாரியன் கதிர்க்கட்டை கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டுகிறார்.

நிலத்திலே தானியம் வளரும்போது சத்துருக்கள் அதை திருடிச் செல்லவில்லை. வெட்டுக்கிளிகள் அதைத் தின்றுபோடவில்லை. கர்த்தர் நிலத்தின் தானியங்களை இஸ்ரவேல் ஜனத்திற்காக பாதுகாத்து பராமரித்து கொடுத்திருக்கிறார்.

கர்த்தர் தங்களுக்குக் காண்பித்த சகல நன்மைகளுக்காகவும் இஸ்ரவேல் ஜனத்தார் அவருக்கு நன்றி சொல்லுகிறார்கள். அவர்கள் கானான் தேசத்தில் போய் சேர்ந்த பின்பு அந்த தேசத்தில் வெள்ளாண்மையை அறுக்கும்போது தங்கள் அறுப்பின் முதற்பலனாகிய ஒரு கதிர்க்கட்டை ஆசாரியனிடத்தில் கொண்டு வந்து கொடுக்கிறார்கள். ஆசாரியன் அந்த கதிர்க்கட்டை ஓய்வுநாளுக்கு மறுநாளில் கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டுகிறான்.

அறுப்பின் முதற்பலனாகிய ஒரு கதிர்க்கட்டு கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டப்படும்போது இஸ்ரவேல் புத்திரருடைய மொத்த கதிர்க் கட்டுக்களையும், கர்த்தர் பரிசுத்தம் பண்ணுகிறார். இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திற்கு வந்து தங்கள் அறுப்பின் முதற்பலனாகிய கதிர்க்கட்டை கர்த்தருடைய சந்நநிதியில் படைத்தபோது வானத்திலிருந்து மன்னா பெய்வது அன்றைய தினத்தில் நின்றுபோயிற்று. இஸ்ரவேல் தேசத்தார் கானான் தேசத்தில் மன்னாவைப் புசிக்காமல் தேசத்தின் வெள்ளாண்மையை அறுத்து அதன் தானியத்தைப் புசிக்கிறார்கள்.

பஸ்காவின் மறுநாளாகிய அன்றைய தினம் அவர்கள் தேசத்தினுடைய தானியத்தாலாகிய புளிப்பில்லாத அப்பங்களையும் சுட்ட கதிர்களையும் புசித்தார்கள். அவர்கள் தேசத்தின் தானியத்திலே புசித்த மறுநாளிலே மன்னா பெய்யாமல் ஒழிந்தது. அதுமுதல் இஸ்ரவேல் புத்திரருக்கு மன்னா இல்லாமற்போய், அவர்கள் கானான் தேசத்துப் பலனை அந்த வருஷத்தில்தானே புசித்தார்கள். (யோசுவா 5:11,12).

கானான் தேசத்திலே இஸ்ரவேல் புத்திரர் தங்கள் வெள்ளாண்மையை அறுக்கிறார்கள். கர்த்தர் அந்த அறுவடையை அங்கீகரிக்கவேண்டும். அவர் வெள்ளாண்மையை ஆசீர்வதிக்கவேண்டும். ஆசாரியன் முதற்பலனாகிய ஒரு கதிர்க்கட்டை ஓய்வுநாளுக்கு மறுநாளில் கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டுகிறான்.

அறுப்பின் முதற்பலனாகிய கதிர்க்கட்டு நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு அடையாளமாயிருக்கிறது. கிறிஸ்துவானவர் கல்வாரி சிலுவையில் மரித்து மூன்றாம் நாளிலே உயிரோடு எழுந்தார். கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார் (1 கொரிந். 15:20).

இஸ்ரவேல் புத்திரர் விளைச்சலில் முதற்பலனைக் கர்த்தருக்குக் காணிக்கையாகச் செலுத்தவேண்டும். இது முதலாவது பிரமாணத்தை நிறைவேற்றும் (மத்தேயு 22:37-38). இஸ்ரவேல் புத்திரருக்கு அறுப்பின் முதற்பலனாகிய கதிர்க்கட்டை ஆசாரியனிடத்தில் அசைவாட்டும் பலியாக கொடுக்கவேண்டும் என்னும் பிரமாணம் கூறப்பட்டிருக்கிறது (லேவி. 23:10, 17, 20, லேவி.2:12-14, யாத்.23:16-19, யாத். 34:22,26, எண். 18:12, எண்: 28:26, உபா. 26:10) இந்த காணிக்கை செலுத்துபவருக்கு விசேஷித்த ஆசீர்வாதங்கள் உண்டு (நீதி.3:9-10). முதற்கனிகளை காணிக்கையாகச் செலுத்துவது கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு அடையாளம் (2 கொரிந். 15:2-23).

**முதற்பலன்களின் பண்டிகையில் செலுத்தப்படும் காணிக்கை:**

1. ஒரு வயதான பழுதற்ற ஒரு ஆட்டுக்குட்டி
2. மெல்லிய மாவு
3. கோதுமை
4. திராட்சைப் பழரசம்
5. எண்ணெய்

**இஸ்ரவேல் புத்திரர் தங்கள் வெள்ளாண்மையை அறுப்பது பற்றி**

1. வயலில் ஓரத்தில் இருக்கிறதை முற்றிலும் அறுக்கவேண்டாம்.
2. சிந்திக்கிடக்கிற கதிர்களை பொறுக்கக்கூடாது
3. எளியவனுக்கும் பரதேசிக்கும் அவைகளை விட்டுவிடவேண்டும்.

விதைப்பிலும் அறுப்பிலும் கர்த்தர் (ஏசாயா 55:10)

விதைப்பானாலும், அறுப்பானாலும் அது தேவனோடு இணைந்திருக்கும் போதுதான் ஆசீர்வாதமாய் இருக்கும். தேவனுடைய ஒத்தாசையில்லாமல் விதைப்பதினால் எந்த மேன்மையும் இல்லை. அறுவடையிலே எந்த பலனும் இல்லை. எழுப்புதல் ஒரு கூட்டு முயற்சி, அப்பொழுது உயிர் மீட்சி ஏற்படும். ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படுவார்கள். மாபெரும் பின்மாரி மழை பெய்யும்.

விதைப்பிலும் அறுப்பிலும் தேவனுடைய பங்கு இருக்கிறபடியால் விதைப்பின் காலத்தில் முன்மாரியையும், அறுவடையின் காலத்தில் பின்மாரியையும் வருஷிக்கப்பண்ணுவார் (யோவேல் 2:23).

ஆதி அப்போஸ்தலர் காலங்களில் சீஷர்கள் போய் வசன விதைகளை விதைத்தார்கள். ஆண்டவர் முன்மாரியாகிய பரிசுத்த ஆவியை ஊற்றினார். ஆவியானவர் சீஷர்களோடிருந்து அற்புதங்களினாலும், அடையாளங்களினாலும் தம்முடைய வசனத்தை உறுதிப்படுத்தினார்.

ஈசாக்கு அந்தத் தேசத்தில் விதை விதைத்தான், கர்த்தர் அவனை ஆசீர்வதித்ததினால் அந்த வருஷத்தில் நூறுமடங்கு பலன் அடைந்தான் (ஆதி. 26:12).

**இன்றைக்கு நாம் என்ன செய்யப்போகிறோம்:**

உண்மையான இருதயத்தோடு இறைவன் நமக்குக் கொடுத்திருக்கின்ற கிருபைகளை, நாம் அறுவடைக்கு ஆயத்தமாகி அதில் பங்கு பெற்று முழுமனதோடு முதற்பலனைக் கொண்டுவர நம் இருதயத்தை ஆண்டவருக்கு ஆயத்தம் செய்வோம்.

ஆம். தேவனுடைய பிள்ளைகளே, சொந்த அனுபவங்களையும், மற்ற எல்லாக் காரியங்களையும் விட்டுவிடுங்கள். ஜீவனுள்ள தேவனுடைய வார்த்தைகளை விதைகளாக ஆத்துமாக்களின் உள்ளத்திலே ஊற்றுங்கள். அறுவடைக்கு நாம் ஆயத்தமாவோம். கர்த்தர் உங்களுக்கு ஏற்ற பலனைக் கட்டளையிட்டு உங்களை ஆசீர்வதிப்பார். ஆமென்.

உங்கள் திருப்பணியில்,
அருட்திரு. மோ. ஐசக் பெர்னாண்டஸ்.
சபை போதகர் / தலைவர்.

Women's Fellowship - Bible quiz (Book of Ruth)







## CSI 76 th FORMATION DAY








# CSI TAMIL PARISH - DUBAI

Karama A - Praise & Worship



Children in the Lord's presence





# ஃபுஜைரா போதகர் மடல்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரால்
என் அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

எழுந்திடு!

இளைஞனே, நான் உனக்குச் சொல்கிறேன். எழுந்திடு!
லூக்கா 7:14

லூக்கா 7:11-17 உள்ள வசனங்களில் இயேசு நயீன் நகரக் கைம்பெண்ணின் மகனை உயிர் பெற்றெழச் செய்கிறார். நயீன் கைம்பெண்ணின் மகன் உயிர்பெறுதல் என்று நாம் வாசிக்கும்போதே, சாரிபாத்துக் கைம்பெண் மகன் (1 இராஜாக்கள் 17) இறைவாக்கினர் எலியாவால் உயிர்பெற்றதையும், சூனேம் நகரச் செல்வந்தப் பெண்ணின் மகன் இறைவாக்கினர் எலிசாவால் உயிர்பெற்றதையும் (2 இராஜாக்கள் 40:8) நம் உள்ளம் எண்ணிப்பார்க்கிறது. இலக்கிய அடிப்படையில் பார்க்கும்போது, நற்செய்தியாளர் லூக்கா, இயேசுவை பழைய ஏற்பாட்டு இறைவாக்கினர்களின் வரிசையில் பதிவு செய்ய விரும்புகிறார் என்று புரிந்துகொள்ள முடிகிறது. ஆகையால்தான், நிகழ்வின் இறுதியில், கூடியிருந்த மக்கள் கூட்டம் அச்சமுற்றவர்களாக, “நம்மிடையே இறைவாக்கினர் ஒருவர் தோன்றியுள்ளார். கடவுள் தம் மக்களைத் தேடி வந்துள்ளார்” என முழக்கமிடுகிறார்கள். எலியா, எலிசா என்னும் பெரிய இறைவாக்கினர்களின் வரிசையில் இயேசுவும் ஓர் இறைவாக்கினராக அறிமுகம் செய்யப்படுகிறார்.

## இந்த நிகழ்வு நமக்குத் தரும் ஆன்மிகப் பொருள் என்ன?

நயீன் நகரத்துக் கைம்பெண் அழுதுகொண்டிருக்கிறார். நம் வாழ்வில் ஈடுசெய்ய முடியாத இழப்பு அல்லது வருத்தம் நேரும்போது நம் கண்கள் கண்ணீர் வடிக்கின்றன. இந்த கைம்பெண் தன் கணவரையும் தன் ஒரே மகனையும் இழந்தவராக இருக்கிறார். தன் கையறுநிலையில் அவர் கண்ணீர் வடிக்கும்போது இயேசு அவர்மீது பரிவு கொண்டு அவரை நோக்கி, “அழாதீர்!” என்கிறார். இயேசு நிகழ்த்தவிருந்த வல்ல செயலை இது முன்குறிக்கிறது. நம் வாழ்வின் கையறுநிலையில் நாம் கண்ணீர் வடித்துக்கொண்டே வழிநடக்கும்போது, வழியில் நம்மைத் திடீரென எதிர்கொள்கிற கடவுள் நம்மேல் பரிவுகொள்கிறார்.

அடுத்து இயேசுவின் பார்வை, இறந்தவரைத் தூக்கிச் செல்கிற பாடையின்மேல் படுகிறது. பாடையைத் தொடுகிறார். தூக்கிச் சென்றவர்கள் நிற்கிறார்கள். இறந்தோர் எடுத்துச்செல்லப்படுகிற பாடை நிறுத்தப்படுவதை எந்தக் கலாச்சாரமும் ஏற்பதில்லை. அதை ஒரு பெரிய எதிர் அடையாளமாகவே பார்ப்பார்கள். நின்றவர்கள் உள்ளத்தில் குழப்பமும் எரிச்சலும் ஒருசேர எழுந்திருக்கும். இவர்களைப் பொருத்தவரையில் இறந்தவர் அடக்கம் செய்யப்பட வேண்டியவர். அவ்வளவுதான்! ஆனால், இயேசுவைப் பொருத்தவரையில் இறந்தவருக்கு மீண்டும் உயிர் கொடுக்கப்பட முடியும். நாமும் சில நேரங்களில், "நான் இவ்வளவுதான்! என் வாழ்க்கை இவ்வளவுதான்!" என நம் இறந்த காலத்தைத் தூக்கிச் சுமக்கிறோம். ஆனால், நமக்கு ஒரு நிகழ்காலமும் எதிர்காலமும் உண்டு.

இளைஞனே, நான் உனக்குச் சொல்கிறேன். "எழுந்திடு!" என்று இறந்த இளைஞனைப் பார்த்துச் சொல்கிறார் இயேசு. இறந்த இளைஞனுடைய காதுகளில் இச்சொற்கள் விழுகின்றன. "ஒளி உண்டாகுக!" என்று சொல்லும்போதே ஒளி உண்டானதுபோல, "எழுந்திடு!" என்று இயேசு சொல்லும்போதே எழுகிறான் இளைஞன். இறந்தவர் எழுந்து உட்கார்ந்து பேசத் தொடங்குகிறார். அதாவது, அவருடைய முழு உடலும் உடனடியாக இயக்கம் பெறுகிறது. பாடையில் எடுத்துக்கொண்டு வரப்பட்டவர் தானே எழுந்து செல்கிறார் தன் தாயோடு. கடவுள் நம் அருகில் நின்று, "எழுந்திடு!" என்கிறார். நாமாகவே அக்கட்டளைக்குப் பதிலிறுப்பு செய்ய வேண்டும்.

ஆண்டவராகிய கடவுள் நமக்கும் தன் பரிவுள்ளத்தைக் காட்டுகிறார். அவருடைய திருமுன்னிலையில் கண்ணீர், அச்சம், குழப்பம், எரிச்சல், இறப்பு, இழப்பு அனைத்தும் மறைந்துவிடுகின்றன. திடீரென நம்மை எதிர்கொள்கிற அவர் நம் வாழ்க்கைப் பயணத்தின் திசையையும் போக்கையும் மாற்றிப் போடுகிறார். நாம் அழைக்கப்பட்ட நிலையில் நம்பிக்கையை அறிக்கையிடவும் அதற்குச் சான்று பகரவும் நம்மைத் தூண்டுகிறார்.

ஆண்டவர் தாமே இந்த மாதம் முழுவதும் உங்களுக்கு பாதுகாப்பு, பெலன் தந்து ஆசீர்வதித்து வழி நடத்துவாராக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில்,
அருட்திரு. நத்தானியேல்
சபை போதகர் - ஃபுஜைரா

# இராஸ் அல் கைமா போதகர் மடல்

அன்பிற்கினிய திருச்சபையின் அன்பர்களே,

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரால் உங்கள் அனைவருக்கும் புதிய மாதத்தின் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மாதத்திலும் கூட ஆண்டவர் நமக்கு தருகின்ற வார்த்தைகளை நாம் தியானிப்போம்.

தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக. மத்தேயு 22:37

“செய்யக்கூடாததைக் கணக்கு வைத்து, அதை எப்படிச் செய்வது என்று குழம்பி தவிப்பதைப் பார்க்கிலும், செய்யவேண்டியது எது என்று தீர்க்கமாக அறிந்துகொண்டு, அதை உத்தமமாக செய்ய முயற்சிப்போமானால், செய்யவேண்டியது வெற்றிகரமாக நிறைவேறும் செய்யக்கூடாதது தானாகவே ஒதுங்கிவிடும்” என்றார் ஒரு பிரசங்கி.

தமக்கு சாட்சியாக இருக்கும்படி அழைத்த இஸ்ரவேலுக்கு, கடவுள் மோசே மூலம் “செய்” என்றும் “செய்யாதே” என்றும் நியாய விதிமுறைகளை கொடுத்திருந்தார். அன்றைய பரிசேயரோ, செய்யவேண்டியது செய்யக்கூடாதது என பல துணை கட்டளைகளைத் தமக்கென உருவாக்கியிருந்தனர், ஒரு நியாயசாஸ்திரி இயேசுவிடம் வந்து, “பிரதான கற்பனை எது” என்று கேட்டான். கர்த்தர் அருளிய பத்து கற்பனைகளையும் சராம்சமாக்கிய இயேசு, ஒன்றோடொன்று இணைந்து நிற்கும் இரு கட்டளைகளை கூறினார். முதலாவது, கடவுளிடத்தில் முழுமையாக அன்புகூருவது் இரண்டாவது, நம்மிடத்தில் அன்பு கூருவதுபோல பிறனிடத்திலும் அன்புகூருவது. இவ்விரண்டையும் பிரித்து பார்க்கமுடியாது. உண்மையாகவே கடவுளிடத்தில் அன்புகூருவோமானால் அவரே நமக்கு ஒரே கடவுள் என்பது வெளிப்படை. அவர் நம்மைப் படைக்கும்போதே தம்மை தேடுகின்ற இருதயத்தை நமக்குள் வைத்துவிட்டார். ஆனால் மனிதனுடைய விழுகையுடன் இது கறைப்பட்டுப் போயிற்று. என்றாலும் கடவுளைத் தேடுகின்ற தேடுதல் நமக்குள் இருந்துகொண்டுதான் இருக்கிறது. மனிதன் தனித்து வாழமுடியாது. அவனுக்கு ஒரு பெலன் தேவை. அது கடவுளைத் தேட வைக்கிறது.

பிரியமானவர்களே, நாம் கடவுளை முழு உள்ளத்தோடு அன்புகூருவது மெய்யென்றால், அவரது நாமம் அவமதிக்கிற விதமாக ஒருபோதும் நடக்கமாட்டோம். உண்மை அன்பு இருந்தால், மெய்யாகவே கடவுளுக்கு கீழ்ப்படிந்திருப்போம். “என்னில் அன்புகூர்ந்து, நான் சொல்வதைக் கேட்டு கீழ்ப்படிந்திருப்பதையே என் மகளிடத்தில் எதிர்பார்க்கிறேன்” என ஒரு தாய் கண்ணீரோடு கூறினாள். ஒரு தாயின் ஏக்கம் இப்படியிருக்க, தேவனின் ஏக்கத்தை நாம் புரிந்து கொள்கிறோமா? “மகனே, மகளே, நீ என்னை நேசிக்கிறாயா?” என்று ஆண்டவர் கேட்கிறார். நமது நேசத்தை அவர் எதிர்பார்க்கிறார். இல்லாவிட்டால் இந்தக் கற்பனைகளைக் கொடுத்திருப்பாரா? பாவத்தில் நாம் விழுந்துபோனாலும் அவரை நாம் நேசிக்க வேண்டுமென்பதே தேவனுடைய ஆவல். அதற்காகவே தமது அன்பை முதலில் அவரே நமக்குச் சிலுவையில் வெளிப்படுத்தியிருக்கிறார். இன்னமும் நாம் என்ன சொல்லுவோம்?

அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால்
நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம். 1யோவான் 4:1

ஆண்டவர் தாமே இந்த புதிய மாதத்தில் புதிய கிருபைகளால் நம்மை வழிநடத்துவாராக... ஆமென்.

ஆண்டவரின் அருட்பணியில்,
அருட்பணி. எ.ஜெம்சன் ஜெபசிங்.
சபை போதகர் - இராஸ் அல் கைமா.

**திருமறைப் பாட ஒழுங்குகள் - அக்டோபர் 2023**

| நாள் | தியானப் பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்தி பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 01-10-2023 | இறை மக்களின் சாட்சி | தானியேல் 3:12-30 | அப்போ. 18:24-28 | லூக்கா 10:1-10 | 15 |
| 08-10-2023 | மாற்றுத்திறனாளி வாழ்க்கையின் புனிதம் | யாத்தி. 4:10-17 | 2 கொரிந். 12:1-10 | யோவான் 5:1-9 | 37 |
| 15-10-2023 | பற்றுநிலையை மீண்டும் கண்டறிந்து வாழ்தல் | 2 நாளா. 34:8-21 | வெளிப். 2:1-7 | யோவான் 2:12-22 | 46 |
| 22-10-2023 | இறை ஆளுகைக்காக துணிச்சலுடன் செயல்படுதல் | எஸ்தர் 8:1-17 | பிலிப்பியர் 2:25-30 | மத்தேயு 10:37-42 | 12 |
| 29-10-2023 | தற்கால உலகில் இளையோரின் ஆன்மீகம் | ஆதியா. 41:37-43 | பிலிப்பியர் 3:1-16 | மத்தேயு 19:16-22 | 111 |

# செயலர் மடல்

காலமே தேவனைத் தேடு - ஜீவ
காருண்யர் பாதம் பணிந்து மன்றாடு
சீலமுடன் பதம் பாடிக் கொண்டாடு
சீரான நித்திய ஜீவனை நாடு - காலமே

வேதனையுணக்குக் கைகூட - சத்ய
வேதன் கிருபை வரத்தை மன்றாட
காலை தேடுவோர் எனைக் கண்டடைவாரே
கண்விழித்து ஜெபம் செய்யுமென்றாரே - காலமே

அதிகாலையில் தேவன் உண்டாக்கிய கதிரவன் உதயமாகும் முன்பே, அதின் ஜோதிமயமான வண்ண காட்சிகள் மாட்சிமையோடு தோன்றி, தேவனின் படைப்பை, படைப்பின் மேன்மையை வெளிப்படுத்திவிடும். தேவனால் ஜனிப்பிக்கப்பட்ட பறவை இனங்களும் பற்பல விதமான குரலினால் மகிழ்ச்சியோடு தேவனைப் பாடி மகிழ ஆரம்பித்துவிடும்.

பக்தன் பாடுவதைப்போல காலமே தேவனைத் தேடுவோம். அதிகாலையில் என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள். முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுவோம். தன் தகப்பனாகிய தாவீது ராஜாவின் தேவனைத் தேடின யோசபாத் என்ற ராஜாவோடு கர்த்தர் கூட இருந்து அவனுடைய காரியங்களை ஜெயமாக நடத்தினார். ராஜ்யபாரத்தை அவன் கையில் திடப்படுத்தினார். யோசபாத் ராஜாவுக்கு மிகுந்த செல்வமும் கனமும் உண்டாயிருந்தது. நிறைவான தேவனைத் தேடுபவர்களுக்குக் குறைவுகளிலே நிறைவைத் தந்து நடத்துவார்.

அதிகாலை ஜெபத்தின் மூலம் தேவனுடைய சமூகத்தை, திருப்பிரசன்னத்தை தேடுவோம். தேவனுடைய பரிசுத்தத்தை தேடுவோம். சீரான நித்திய ஜீவனை நாடுவோம் (தேடுவோம்).

ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இவ்விதமாக கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்றுங்கள் என்னும் கர்த்தருடைய வார்த்தைக்கு இசைந்து திருச்சபையாக நமது முன்னாள் ஆயர்கள் Rev.சந்திரசேகர், Rev.ஜெயக்குமார் ஆகிய இரண்டு போதகர்களுக்கும் மருத்துவ உதவிக்காக, உற்சாகமாகக் கொடுத்த யாவருக்கும் மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

September 10-ம் தேதியன்று நமது திருச்சபையின் பிள்ளைகள் Memory Verse Contest-ல் உற்சாகமாகக் கலந்துகொள்ள ஆயத்தப்படுத்திய பெற்றோர் யாவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது திருச்சபையின் Junior Church, Cornerstone, Youth Fellowship, Mens Fellowship, Womens Fellowship, Camp Ministry, Prayer Cell ஊழியங்கள் யாவும் சிறப்பாக நடைபெற்று வருவதற்காக கர்த்தருக்கு ஸ்தோத்திரங்களைச் செலுத்துகிறேன். தாயகத்தில் பற்பல ஸ்தாபனங்கள மூலமாக நமது சபை தாங்கிவரும் 100 மிஷனெரிமார்கள் யாவருக்காகவும், அவர்கள் செய்துவரும் ஊழியங்களுக்காகவும் ஜெபிப்போம். கொளகூர் மிஷனெரி மருத்துவமனையில் பணியாற்றி வரும் Dr.Samuel Delightson அவர்கள் குடும்பத்திற்காகவும், சிகிச்சை பெற வரும் அங்குள்ள மக்களுக்காகவும், அவர்கள் சரீர சுகத்திற்காகவும், இரட்சிப்பிற்காகவும் ஜெபிப்போம்.

அக்டோபர் மாதத்தில் RAK கிளைச்சபையிலும், நவம்பர் மாதம் துபாய் திருச்சபையிலும் நடைபெற இருக்கும் Harvest Festival ஆயத்த ஒழுங்குகளுக்காக ஜெபிப்போம். உற்சாகமாகப் பங்குபெறுவோம். தொடர்ந்து நமது திருச்சபையின் CDA அனுமதிக்காக, Bank Transaction ஒழுங்குகளுக்காக கர்த்தரை நோக்கி ஸ்தோத்திரங்களை ஏறெடுப்போம்.

Praise be to God.

Babu Jeyaseelan, Secretary.

## வருந்துகிறோம்

**"கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்"**

நமது சபையின் அங்கத்தினர்

Mr. Daniel George அவர்கள் கடந்த 05-09-2023 அன்று

கர்த்தருக்குள் நித்திரை அடைந்துள்ளார்கள்.

# நீங்கள் கிறிஸ்தவரா...

"தீங்குநாளில் அவர் என்னைத் தம்முடைய கூடாரத்தில் மறைத்து, என்னைத் தமது கூடார மறைவிலே ஒளித்துவைத்து, என்னைக் கன்மலையின்மேல் உயர்த்துவார்." சங்கீதம் 27:5

கர்த்தரை நம்பு
(சங்கீதம் 37:5)
இன்றைய
சூழ்நிலையில்
உலகைச்
சூழ்ந்திருக்கும்
அபாயம்
அளவிடற்கரியது.
நிலநடுக்கமும்
அதன்... இடர்பாடுகளும்
உயிர்சேதமும்
தொடர்கதையாய்
தொடர்கிறதே!
பருவநிலை
மாறுதலால்
காடு பற்றி
எரிவதால்
இயற்கை
மூலியங்கள்
அழிகிறதே!
மழை மிகுதியால்
நிலப்பரப்புகளில்
தண்ணீர்
தேஙகுகிறதே!
மக்கள்
தவியாய் தவிப்பது
பரிதாபம்தானே!
இன்று விஞ்ஞானம்
உச்சம் பெற்று
உலாவரும்
உலகமிது...
மனிதரின் நடை
உடை பாவனை
மாறி மாறி
தட்டுத்தடுமாறும்
காலமிது...

அறம் பிழைப்பதும்
நீதி நேர்மை
தடம் புரள்வதும்
பொய்யான உலகில்
நிலையிலா வாழ்வில்
மெய்யான கர்த்தரை
காண்பவர் யார்?
கர்த்தருடைய கண்கள்
மனுஷருடைய
வழிகளை
நோக்கியிருக்கிறது
(யோபு 34:21)
கல்லுக்குள்
தேரையும்
கற்பத்துக்குள்
கருவையும்
உயிர்தந்து
உடல்தந்து
உணவு கொடுத்து
உலகில்
பிறக்கச் செய்வது...
காக்கும் கடவுள்
கர்த்தரே...
எவராலும்
எண்ணிப்பார்க்க
எட்டாத வகையில்
அண்டசராசரங்களை
ஆக்கிய தேவனாகிய
கர்த்தருக்கு
ஸ்தோத்திரம்
இறைவனின்
ஈடற்ற வல்லமையை
உணர்வோம்.
ஊன்றி ஜெபிப்போம்.
என்றுமே
இயேசுவின் விசுவாசி

ஐசுவரியம்...
இழந்துவிடவில்லை.
பிரளயம்
வந்தபோதிலே
சர்வமும் நிர்மூலமான
நேரத்திலே...
நோவாவை...
பேழையில் வைத்து
வாழவைத்தவரே....
நம் தேவன்.
உதாரணங்கள்
ஒன்றல்ல இரண்டல்ல
ஓராயிரம்.
நினைவில்
கொள்வீரே...
எதுவாயினும்
எப்படிவரினும்
கர்த்தரின்
பிள்ளைகளுக்கு
தீங்குவருமோ?
தம் சிறகுகளால்
மூடுவார்.
காப்பாற்றி
கரைசேர்ப்பது
மட்டுமா?
வானளாவ
உயரவும் வைப்பார்
இந்த உணர்வை
இதயத்திலே சுமந்து...
பரிசுத்தரின் பக்தி
சத்தியம் எனில்
சித்தம் ஒன்றாய்
இயேசுவிடம்
வருவோமே...
சஞ்சலம் விட்டு
எழுவோமே...

என்றும் அன்புடன், T. ராஜ்குமார். Mens Fellowship.

# தீர்க்கர் அறிக்கை

வான தேவன்
பூமி வாராரு
ஞான தீபம்
ஏற்றப் போராரு

மனித னாக
ஆகப் போராரு
புனித மாக
ஆக்கப் போராரு

பிறக்கு முன்னே
பேரு தந்தாரு
பிறக்கப் போகும்
ஊரு சொன்னாரு

யூதா கோத்திர
வேரு என்றாரு
வேதம் பேசுது
நாலாயிரம் ஆண்டுகள்

தாய்தந்தை இன்னும்
பிறக்க வில்லை
மூத்தோர் பற்றி
மூச்சே இல்லை

கர்த்தர் கருணையும்
தீர்க்கர் வரிசையும்
தெரிந்து அறிவித்த
முன்னுரைப் பிரகடனம்

கன்னித் தாயின்
கன்னிக் கருவில்
சின்னப் பாலன்
செனிக்கப் போராரு

அம்மா அப்பா
அழைக்கப் போராங்க
இம்மானு வேலு
என்ற பேரு

சிறிய ஊரு
பெரிய பேறு
இருந்தது எப்ராத்தா
இப்போது பெத்லகேம்

அப்பத்தின் வீடு
பெத்லகேம் ஊரு
இப்போதும் எப்போதும்
இல்லை ஈடு

யூதாவுள் சிறியது
கோதாவில் அரியது
வேரடி வேராகப்
பிறந்து வருவது

ஆதாரங்கள் :
ஆதியாகமம் 3:15, 49:10
மீகா 5:2
ஏசாயா 7:14
கவிதை எண் : 263
ஆக்கம் : மணிமுத்து.

# திருச்சபை ஜெபநாள் 01-10-2023 (முதல் ஞாயிறு)

“பயப்படாதே, நான் உன்னோடே இருக்கிறேன், நான் உன் சந்ததியைக் கிழக்கிலிருந்து வரப்பண்ணி, உன்னை மேற்கிலும் இருந்து கூட்டிச்சேர்ப்பேன்.” ஏசாயா 43:5

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, “திருச்சபை ஜெபநாளில்” பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும் சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும், ஜெபக் குழுக்களிலும் மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

## துதிகள்

- கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலம், ஜீவனுக்காக, திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.
- தேவன் நம் ஜெபத்தைக் கேட்டு நம் மத்தியில் பிரசன்னராயிருந்து, நம்மைத் தாங்கி பெலப்படுத்தியமைக்காக ஸ்தோத்திரம் கூறுவோம்.
- திருச்சபையின் அனைத்து ஊழியங்களும் சிறப்பாக நடைபெற கர்த்தர் கிருபை பாராட்டினார்.
- October 28-ம் தேதி இராஸ் அல் கைமா கிளைச்சபையிலும், November 12-ம் தேதி துபாய் திருச்சபையிலும், November 26-ம் தேதி ஃபுஜைரா கிளைச்சபையிலும் நடைபெற இருக்கும் அறுவடைப் பண்டிகை (Harvest Festival) க்காக ஜெபிப்போம்.

## திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

- நம் குருவானவர்கள், சபை ஊழியர், மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காக, திருப்பணிகளுக்காக,
- நம் திருச்சபையின் முன்னாள் குருவானவர்கள், அவர்கள் குடும்பத்தாருக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும்,
- நம் திருச்சபைகளைச் சேர்ந்த திருச்சபையினர் அனைவருக்காகவும், ஆங்காங்கே நடைபெறும் ஆராதனைகள், ஊழியங்கள், சிறுவர், வாலிபர், ஆண்கள், பெண்கள் மத்தியில் நடைபெறும் சிறப்பு ஊழியங்கள் மற்றும் முகாம் ஊழியங்களுக்காக,
- திருச்சபையின் நிர்வாகக்குழு அங்கத்தினர்களுக்காகவும், தேவ சித்தம் நிறைவேற்றும் வகையில் அவர் தம் பணிகளுக்காகவும்,
- திருச்சபைப் பணிகளை ஜெபத்தோடு உற்சாகமாகவும், உதாரத்துவமாகவும் தாங்கி வரும் திருச்சபை மக்களுக்காக,
- சிறுவர் வேதபாடசாலைத் திருப்பணிகளில் அர்ப்பணிப்போடு பங்கு பெறும் தேவபிள்ளைகளுக்காக, பயன்பெறும் நம் குழந்தைகளின் இறைபக்திக்காக,
- நமது திருச்சபையின் ஜெபக்குழுக்களுக்காக, ஐக்கிய, ஆன்மீக வளர்ச்சிக்காக, மிஷனெரி ஊழியங்களுக்காக, தாங்கும் திருச்சபை மக்களுக்காக, மற்றும் மிஷனெரி ஸ்தாபனங்களுக்காக,
- தென்னிந்தியத் திருச்சபைக்காக, அனைத்துப் பேராயங்கள், நமது பேராயர்கள், குருவானவர்கள், திருப்பணியாளர் அனைவருக்காகவும், திருப்பணிகளுக்காக,
- கொளகூர் மாதிரி கிராமத்தில் அமைத்துள்ள மருத்துவமனை ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

## இந்திய நாட்டுக்காக ஜெப வேண்டுதல்கள்

- இந்திய நாட்டுக்காக, நாட்டின் ஆட்சியாளர்கள், நாட்டின் பொருளாதார வளர்ச்சி, வேளாண்மை (விவசாயி) களுக்காக, அனைத்து சமயத்தாரும் ஒற்றுமையாக இருக்க, மனித நேயமும், வறட்சி நீங்க, இயற்கை வளங்கள் பாதுகாப்புக்காக, மழைக்காக, மழைநீரை பாதுகாக்க ஜெபிப்போம்.
- 2024-ம் ஆண்டு நடக்க இருக்கும் தேர்தலுக்காக
- வேற்றுமைகள் ஒழிந்து சமத்துவம் வளர
- தேசம் முழுவதும் எல்லை பாதுகாப்புக்காக

## ஐக்கிய அரபு நாடுகள் (UAE) தேசங்களுக்காக ஜெப வேண்டுதல்கள்

- UAE தேசங்களில் வசிக்கும் மக்கள் நல்வாழ்வுக்காக
- அரசர் குடும்பங்களுக்காக
- நல்ல வேலை வாய்ப்புக்காக, வேலை தேடி வருபவர்களுக்கு வேலைகள் கிடைக்க
- UAE-ல் உள்ள CSI திருச்சபை ஊழியங்களுக்காக
- UAE-ல் நடைபெறும் அனைத்து திருச்சபைகள் ஊழியங்களுக்காக
- அனைவருக்கும் ஆண்டவரின் நற்செய்திக்காக
- காலநிலை மாற்றத்திற்காக
- அனைத்து சமயத்தாரும் சமாதானத்துடன் ஒற்றுமையாக

## உலக நாடுகளுக்காக ஜெப வேண்டுதல்கள்

- உக்ரைன் - ரஷ்யா போர் சமாதானத்திற்காக
- கனடா - இந்தியா சமாதானத்திற்காக
- மொராக்கோ தேசத்தில் ஏற்பட்ட நிலநடுக்கம், பலியானோர் குடும்ப சமாதானத்திற்காக, நாட்டின் பொருளாதாரத்திற்காக
- லிபியா நாட்டில் ஏற்பட்ட பெரு வெள்ளத்திற்காக, பலியானோர் குடும்ப சமாதானத்திற்காக, நாட்டின் பொருளாதாரத்திற்காக
- உலக நாடுகள் சமாதானத்திற்காக
- பருவநிலை மாற்றத்திற்காக
- உலகம் முழுவதும் நடைபெறும் ஆண்டவரின் திருப்பணிக்காக

## நமது ஜெப மன்றாட்டுகள்

- இந்த மாதத்தில் தேவ வழிநடத்துதல்கள், ஆசீர்வாதங்களுக்காக, பாதுகாப்பு, பராமரிப்பு, சுகம், பெலம் தேவ கிருபைக்காக,
- நமது குடும்பங்களின் தேவைகளுக்காக மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்காக, வளமிகு எதிர் காலத்துக்காக,
- வேலை வாய்ப்புக்காய் காத்திருப்போருக்காக, விசா பிரச்சனைகளில் இருப்போருக்காக, சரீர சுகவீனங்களில் சிகிச்சை பெறுவோருக்காக,
- திருமணத்திற்காக தெய்வ வழிநடத்துதல் நாடுவோருக்காக, குழந்தை பாக்கியத்திற்காக மற்றும் பிரசவ கால கட்டத்தில் இருப்போர் கிருபைக்காக, குடும்பங்களை விட்டுத் தனியே பணிக்காக வந்தவர்களுக்காக,
- அனைத்து கல்வி, சமுதாய, மருத்துவ ஊழியங்களுக்காய் ஜெபிப்போம்.
- பொருளாதார நெருக்கடியினால் வேலையில் ஏற்பட்டுள்ள பிரச்சனைகள் நீங்கவும், பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருடைய தேவைகள் சந்திக்கப்படவும்,
- குடும்பங்களில், வேலையிடங்களில் மன அழுத்தத்தோடு வாழும் மக்கள் நல்வாழ்வு பெற ஜெபிப்போம்.
- உலகின், இந்தியாவின், தமிழ்நாட்டின் அரசியல் நிலை சீரடைய ஜெபிப்போம்.
- கல்வி கற்றுவரும் எல்லா மாணவர்களுக்காகவும், உயர்கல்விக்காக ஆயத்தப்படும் பிள்ளைகள் ஏற்ற கல்வி பெற்று வாழ்வு உயர்த்தப்படவும் ஜெபிப்போம்.
- கர்த்தர்தாமே யாவரையும் எல்லாவிதமான நோய்களுக்கும் விலக்கி பாதுகாத்து நடத்தவும், புதிய வேலைவாய்ப்புக்காக காத்திருக்கும் யாவருக்கும் நல்ல வேலைவாய்ப்பைத் தந்து நடத்தவும் ஜெபிப்போம்.
- ஒவ்வொரு வாரமும் நடைபெறுகின்ற ஊழியங்களுக்காக
- CDA அங்கீகாரத்திற்காக, CSI Tamil Parish Dubai தேசத்தில் ஆலயம் எழுப்ப
- Xmas Carol பாடல் பயிற்சிக்காக

பாரத்துடன் ஜெபிக்கவும், தனி ஜெபத்திலும், குடும்ப ஜெபத்திலும் தொடர்ந்து ஜெபிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

## பெரியோர்களுக்கான வேதவினா போட்டி

(எசேக்கியேல் 21-30)

கீழ்கண்ட வினாக்களுக்கு எசேக்கியேல் 21-30 அதிகாரங்களிலிருந்து விடைகளை எழுதி 20-ம் தேதிக்குள் போதகருக்கு அனுப்பினால், அனைத்து வினாக்களுக்கும் சரியான விடை எழுதுபவர்களின் பெயர் தூதன் புத்தகத்தில் வெளியிடப்படும்.

1. அகோலாள், அகோலிபாள் என்பதன் பொருள் என்ன?
2. இரண்டு வழிகளின் முனையாகிய வழிப்பிரிவிலே நிமித்தம் பார்ப்பவன் யார்?
3. எகிப்தியரின் ஜநநதேசம் எது?
4. கடல்களின் நடுமையத்திலே எதின் தாபரம் இருக்கிறது?
5. தேவனுடைய தோட்டம் எது?
6. தங்கள் சிங்காசனங்களை விட்டு இறங்கி தரையிலே உட்கார்ந்தவர்கள் யார்?
7. யார் இஸ்ரவேல் புத்திரரை வர்மம், ஆகடியம் பண்ணினர்கள்?
8. ஓய்வு நாட்களுக்கு தங்கள் கண்களை மூடிக்கொண்டவர்கள் யார்?
9. எகிப்தின் பெலன் எது?
10. கொப்பரை என்னப்பட்டது எது?

## செப்டம்பர் 2023 வேதவினா சரியான பதில்கள்

| | |
|---|---|
| 1. கேதுருவின் நுனிக்கிளை | எசேக். 17:3 |
| 2. பெனாயாவின் குமாரனாகிய பெலத்தியா | எசேக். 11:13 |
| 3. நோவா, தானியேல், யோபு | எசேக். 14:14 |
| 4. எசேக்கியேல் 12:2 | |
| 5. திராட்சைச்செடி | எசேக். 15:2 |
| 6. பிழைப்பதில்லை, சாகவே சாவான் | எசேக். 18:13 |
| 7. எருசலேமின் தாய்-ஏத்தித்தி, தகப்பன்-எமோரியன் | எசேக். 16:3 |
| 8. பெண் சிங்கம் | எசேக். 19:2 |
| 9. வனாந்தரங்களிலுள்ள நரிகளுக்கு | எசேக். 13:4 |
| 10.ஓய்வுநாட்களைப் பரிசுத்தமாக்குதல் | எசேக். 20:20 |

## செப்டம்பர் 2023 வேதவினா போட்டி பதில் எழுதியவர்கள்

1. திருமதி. வாலண்டினா செல்லப்பா
2. திருமதி. அனித்தா ஆல்வின்
3. திருமதி. இனிதா ஜோனா
4. திருமதி. சத்திய வினோதா கிறிஸ்டோபர்
5. திருமதி. ஜெயகிருபா சாலொமோன்
6. திருமதி. ஷெர்லி சாம்ராபின்
7. திருமதி. ஐரிஸ் பொன்கிறிஸ்டோபர்
8. திருமதி. மெர்லின் விஜில்
9 .திருமதி. ரோஸ்லின் இம்மானுவேல்
10.திருமதி. ஜெமிமா கிறிஸ்றோபல் அபிலாஸ்
11.திருமதி. டெய்ஸி பிரியா விஜய்
12.திரு. V. மோகன்
13.திருமதி. ஷோபி ராணி ஜெயசேகர்
14. திருமதி. ஷாமினா பென்னி
15. திருமதி. பெமி டார்வின்

# தெரிந்து கொள்வோம்

## பாடல் பிறந்த வரலாறு - பாமாலை
## Rev. ஜோசப் ஸ்கிரீவன்



Rev. ஜோசப் ஸ்கிரீவன் அவர்கள் 1819-ம் ஆண்டு அயர்லாந்து நாட்டில் சிப்பாட்ரிக் என்னும் இடத்தில் பிறந்தார். தனது இளமைக் கல்வியை பிறந்த ஊரிலேயே முடித்து, பின்னர் டப்ளின் நகரில் இறையியல் கல்வி கற்று பட்டம் பெற்றார்.

24-ம் வயதில் ஸ்கிரீவனுக்கு திருமணம் நிச்சயிக்கப் பட்டது. திருமண நாளுக்கு முன்தினம் மணப்பெண் குதிரையில் ஏறி ஒரு ஆற்றைக் கடக்க முயன்றபோது தவறி ஆற்றில் விழுந்து, மூழ்கி உயிரிழந்தாள். ஆற்றின் மறுகரையில் நின்று பார்த்துக் கொண்டிருந்த ஸ்கிரீவன் உதவி செய்யக்கூடாமல் திகைத்து நின்றார். இதனால் அவரது மனநிலை மிகவும் பாதிக்கப்பட்டது.

1845-ம் ஆண்டு தனக்கு ஏற்பட்ட துயர நிகழ்ச்சியை மறக்க கனடாவுக்குச் சென்றார். துறைமுகம் என்ற ஊரில் ஆசிரியராகப் பணியாற்றினார். தெய்வ பக்தி நிறைந்தவராகவும், ஊருக்காக வாழ்பவராகவும் விளங்கினார். தன்னிடம் உள்ள பணம், பொருள் அனைத்தையும் ஏழை எளியவர் மற்றும் அனாதைகளுக்கு செலவு செய்தார்.

ஸ்கிரீவன் சீர்திருத்த சபையில் சேர்ந்து ஊழியம் செய்து வந்தார். அச்சமயம் ஒரு பெண்ணை மணக்க விரும்பினார். மணநாளும் குறிக்கப்பட்டது. திருமணத்திற்கு முன் மணமகளுக்கு ஜலதோஷம் பிடித்து, அதிக காய்ச்சல் வந்து அவளும் மரித்து போனாள்.

இந்த திருமணத்தின் மூலம் தன் மகன் சந்தோஷமடைவான் என்று நம்பியிருந்த ஸ்கிரீவனின் தாயார் தாங்கமுடியாத துயரத்திற்குள்ளானார். தன்னுடைய வேதனையின் மத்தியிலும் பிறர் நலன் கருதும் ஸ்கிரீவன், அயர்லாந்தில் தனிமையில் தன்னை எண்ணி வருந்தும் தாயாரை ஆறுதல்படுத்த 1855-ம் ஆண்டு இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள் என்ற தலைப்பில் ஒரு பாடலை எழுதினார்.

ஸ்கிரீவனால் எழுதப்பட்ட பாவ சஞ்சலத்தை தீர்க்க பிராண சினேகிதர் உண்டே என்ற இந்த பாடல் உலகம் முழுவதும் நற்செய்தி கூட்டங்களிலும், ஜெபக்கூட்டங்களிலும் இன்னும் பாடப்பட்டு வருகிறது. படிப்பறிவில்லாத பாமர மக்களும் எளிதில் புரிந்து கொள்ளும் அமைப்பு கொண்ட பாடல், உலகிலுள்ள கிறிஸ்தவ பாடல்களில் மிகவும் விரும்பிப் பாடப்படும் பாடலெனப் புகழ்பெற்றது. இப்பாடலுக்கு ஜெர்மனியில் உள்ள வழக்கறிஞர் சார்லஸ் கான்வர்ஸ் அருமையான ராகம் கொடுத்தார்.

Rev. ஸ்கிரீவன் அவர்கள் 1886-ம் ஆண்டு தனது 66-ம் வயதில் நைஸ்பேக் என்னும் ஊரில் ஒரு சிறிய ஆற்றில் தவறி விழுந்து மரித்தார்.

R.ஜெபர்சன்

## FACTS ABOUT DISABILITY

### What Is Disability?

Disability is any mental or physical condition that makes it difficult for the person to perform daily activities or have limited participation in the world. Disability may affect the person's ability to communicate, learn, vision, move, think, hear, have mental health, and have social relationships.

There are 21 types of disabilities are mentioned in RPWD (Rights of Persons With Disabilities). Let's get to know some of them.

1. Cerebral Palsy

- Having trouble walking.
- Not being able to use your hands and legs.
- The incapacity to speak.

2. Intellectual Disability

- Lack of age-appropriate activity.
- Lack of comprehension.
- An inability to complete any task effectively.

3. Developmental Delay

- For a period of two to three months, the infant's head is not positioned correctly.
- Followed by a period of five to six months in which the infant will not sit.
- From five to seven months, the infant will not begin to crawl.
- From seven to ten months, the baby will not stand.
- From ten to twelve months, the infant is not expected to walk.

4. Mental Health Problem

- Vague thinking.
- Persistent anxiety or irritability.
- Fluctuating level of happiness or anxiety.
- Blurred/blurry vision and lack of tension.
- Absence of truth.

### 5. Learning Disability

- Lack of adequate age-appropriate learning.
- Forgetfulness.
- Attention deficit disorder and impairment of writing skills.
- Lack of mathematical reasoning.

### 6. Down Syndrome

- Chromosomal trans-locations can lead to developmental alterations.

### 7. Attention Deficit Hyperactivity Disorder

- Engaging in physical activity, such as running without stopping.
- Competing against others, and breaking household objects.
- Alterations in their behavior as a result of changes in the environment.

### 8. Autism Spectrum Disorder

- The child avoids laughing.
- Child does not look directly into the other person's eyes.
- Child does not turn around when we call them by name.
- Talking alone, suddenly sobbing, and laughing.
- Not talking or using the same term repeatedly.

In children aged between one and three years, a diagnosis of autism can be made based on a few distinct indicators.

- The characteristics and customs of society will have an impact on an individual's ability to communicate with others through language and body language, as well as their ability to interact with others.
- Autistic children often experience a sense of autonomy, with their actions, behavior, and choices being limitless.
- They may not be able to hear when spoken to, and some parents may mistakenly believe that they are deaf.
- But the truth is, autistic children don't have hearing loss. They're not afraid of anything.
- They engage in repetitive behaviors, such as flapping their hands, spinning, or running in a circle.
- They may avoid eye contact while communicating, may not want to be touched or embraced, and may express emotions such as crying and sadness without cause.
- Additionally, they may limit their diet to certain foods, pay little attention to food, and avoid touching food items. Furthermore, they may demonstrate their pain to others while being beaten.

Sobia Rani, ABA Therapist, MRW.

# CHILDREN'S CORNER

The rapid successions on the throne of Israel and the violence that accompanied them indicate in what state of anarchy the nation had fallen. All this was the result of the fact that they had abandoned the true worship of God the Almighty.

*This month kids' corner concentrates on KING MENAHEM (16$^{TH}$ KING OF THE DIVIDED KINDGOM OF ISRAEL) 2 KINGS 15:13-22. Answers should have reference.* ***Read, Search, Write.*** *Follow NKJV.*

**LEARN SOMETHING NEW :** Menahem's name appears multiple times in the archaeological record. The name Menahem has also appeared on a seal, currently housed in the Louvre Museum, and on a recently-discovered bulla (seal impression) from Jerusalem.




**GRADE 3 TO GRADE 5** **CHOOSE THE CORRECT WORD FROM THE BOX TO FILL IN THE BLANKS:**

**PEKAHIAH PUL GADI SAMARIA FIFTY**

1. King Menahem father was _______.
2. _______ king of Assyria came against the land.
3. From each man _______ shekels of silver, to give to the king of Assyria.
4. _______ his son reigned in his place. 5. He reigned ten years in _______.

**GRADE 6 TO 8 AND GRADE 9 AND ABOVE** 1) In which year of King of Judah did King Menahem came to power in Isreal? 2) How many years King Menahem ruled? 3) How did King Menahem came to power?
4) Menahem sacked Tiphsah. Why? 5) What was the consequences the inhabitants of the city of Tiphsah has to face?



6) Who came against Menahem's reign?
7) Menahem gave King Pul a 1000 talents of silver why? 8) King Menahem was able to pay the money toking Pul without any problem. How did he manage to do so?
9) Who came to power after King Menahem's death? 10) How is this picture related to King Menahem?

***Priya Singh** (Please send your answer to the pastor by 15th of this month)*

## Answers for the month of September 2023 (KING SHALLUM 15TH KING OF THE DIVIDED KINDGOM OF ISRAEL - 2 KINGS 15:8, 10, 13-17)

### GRADE 3 TO GRADE 5 and GRADE 6 TO 8 AND GRADE 9 AND ABOVE



1) Only for 1 month (2 Kings 15)
2) In the 38th year of King Azariah / Uzziah king of Judah, Zechariah came to rule in Israel. (2 Kings 15:8)
3) Menahem the son of Gadi went up from Tirzah, came to Samaria, and struck Shallum the son of Jabesh in Samaria and killed him (2 Kings 15:14)
4) All the women who were there with child he ripped open. (2 Kings 15:16) 5) From Tirzah, Menahem attacked Tiphsah, all who were there, and its territory. Because they did not surrender, therefore he attacked it. (2 Kings 15:16) 6) Menahem the son of Gadi became king over Israel in the place of king Shallum. (2 Kings 15:17)
7) Shallum struck and killed King Zechariah in front of the people. (2 Kings 15:10). After one month as king Shallum was killed by Menahem ( 2 K 15:`4)

## Last (September) months Childrens Corner prize winner

**Correct answer Participants:**

**GRADE 3 TO GRADE 5** 1) Jonathan Solomon 2) Lydia Abigail 3) Mark 4) Jonathan Calvin 5) Adora Binny 6) Jeholin Victor 7) Steve 8) Godwin Darwin

**GRADE 6 TO GRADE 8** 1) Ferwin Martin 2) Katelyn Joline 3) Tiana 4) Trinita 5) Joanna Solomon 6) Lenofa Joy 7) Leonel Sam 8) Jerola Sashya 9) Sarah Arul

**GRADE 9 AND ABOVE** 1) Gracelin 2) Caroline Joshna 3) Karen Singh 4) Jaymie 5) Jaymen 6) Maisie Fedora 7) Hannah Arul 8) Jeflin Victo 9) Jenica Roshan

**Last month July - August 2023** **GRADE 9 AND ABOVE** Jenica Roshan



# BIRTHDAY CELEBRANTS - OCTOBER 2023

## DUBAI

1 Mr. John Marshel Earnest
1 Miss Jeshna Gifty Jefferson
1 Miss Shefia Vijil Singh
1 Master Melvin Gabriel Ravi
2 Mr. Joshua Durairaj
2 Mr. Lino Joelsingh
2 Mrs. Bency Ranjith Raj
2 Master Brian Daniel Singh
2 Mrs. A.Vijila Jebamalar Mahiban
2 Mr. I.Gnana Gandhi
2 Master Liam Joshua Merlin Jose
2 Mr. Akshai Kumar A.G.
3 Miss Nitya Balan
3 Miss Benitta Sherine Ralstan
3 Miss Jeni Ginesh Selson
3 Miss Jesi Ginesh Selson
3 Master Timon Kumar Praveen Kumar
3 Mr. Allan Madhuram
3 Master John Darren Suresh
4 Mr. Yesu Paul Raj
4 Master Nicolin Nepolean
4 Mr. Praveen Charles
5 Master Aaron Darwin Allen Kingsly
5 Master Rexon Paul Sampath
5 Miss Anisha John Kennedy
5 Miss Deva Kiruba Dani Devasahayam
5 Master Ezra Jubal Edwin
5 Miss Joshitha Joshuva
5 Master Adon Jehuel Anand Chandrasekar
5 Mrs. Jaqueline Sheba Jedidiah
5 Mr. Andrew Isaac Raj
5 Master Prince Michael Jerry Nishore
5 Mr. Praveen Jebasingh
6 Mr. Beven Chris Babu Jeyaseelan
6 Miss Anita Samuel Natarajan
6 Mrs. Shini Stephen Jebadurai
6 Miss Tina Jane Baston Jain Durai
7 Mr. J.Alwyn
7 Mrs. Davitha David Rajesh
7 Mr. Sharvin John
7 Mr. James Selvaraj Jebaselvan
8 Master Jelvin Sam John Selvin
8 Master Joshua Jeyaseelan
8 Mrs. Hepcy Christina Mary Joseph Dominick
8 Master Joshua Santhosh Ponchristopher
8 Miss Alena Geoflin Ashwin Sudharsingh

9 Mr. S.John Christopher
9 Mr. A.Johnson
9 Master Leonel Sam Ebenezer Prabu
9 Mr. Sam Stalin T
10 Mr. S. Jebamani Robert
10 Mr. J.R.Shajin
10 Mr. Christin Solomon Walter
10 Master Iven David
10 Mr. Lambert Gabriel
11 Mr. Henry Vivian Sekar
11 Mrs. Vigitha Shajin
11 Master Aaron Theophilus Charles
11 Mr. Samuel Raja T.
11 Miss Vesna Bright
11 Miss Adora Mariam Glady
11 Mrs. Sumitha Preemakumari Samson Gilbert
11 Mr. Davidson Packiaseelan
11 Mrs. Asha Robin
12 Mr. P.Jeya Seelan
12 Mr. Sudhakar Joseph
12 Master Lemuel Christianus Rajesh
12 Miss Nasya Vijay
12 Mrs. Auxy Jerin Kanagaraj
12 Mr. Vinoth Raja
12 Mr. Giftlin Shaju J.A.
12 Mrs. Roslin Immanuel
12 Mr. Benjamin Kasthuri Doss
12 Mr. Robin Charles Samuel Sornaraj
13 Master Jabastin Devamani John
13 Mrs. Josephine Julie C. Jebaraj
13 Mr. C.Britto Vethamani
13 Master Jaden Rodney Jebin Raja
13 Master Nathan Jared Samuel
14 Mr. Dawson Richard Ezakiel
14 Mrs. Lavanya Shyam
14 Miss Jenefa Deva Thilak Pandian
14 Miss Movina Moses
14 Miss Asvina Moses
14 Mr.I.Jemil Singh
14 Master Angelo Christopher Arul Raj
14 Master Sheldon Jeshuel Sam Magesh
14 Mr. Samson Arputharaj
14 Mr. P. Sam Deva Rajan
15 Mrs. Nalini Prabaharan
15 Mr. Vinoth Ramaiyan
15 Mr. Bharathi Mahadevan
15 Mrs. Kohila Priya Sam
16 Miss Mary Stella Gnanamuthu
16 Mr. Dominic Amal Isa Daniel George

16 Master Nathan Joseph Daniel Jason
16 Master Santino Shine B. Raj
16 Mrs. Beena R
17 Mr. Dhino Suresh
17 Mrs. Deepa Deva Anandhi Johnson
17 Mrs. Daisy Johnson
17 Miss Halen Jaba Chindya Lawrance
18 Mr. Allen Luke Victor Roland
18 Miss Jenita Chris Solomon
18 Master Milan Jeya Prakash
19 Master Jaymen Joseph
19 Miss Jaymie Joseph
19 Miss Stesha Stanley Justin Raj
19 Miss Adlin Rethna Vairavanathan
19 Mrs. Benilin Hepzibah Jebin RajaKumar
19 Master Ryan Arul Emrold Peter
19 Miss Bernice B. Paul
19 Master V. Justin Vijaya Kumar
19 Mr. D. Liju
20 Mrs. Diana Anoop
20 Mr. S.Fredrick Luther
20 Mrs. Sylvia Sudhakar
20 Miss Alcina Rosita Jernaus Britto
20 Mr. J.Vijil Israel
20 Master Kelvin Jebastine Kingsley
20 Miss Kezita Jebastine Kingsley
20 Mrs. Jayanthy Solomon
20 Miss Angelin Blessina Anandaraj
20 Miss Dulin Gliffy Gliftan
20 Miss Steffi Priya Dharshani Stanley Jones
20 Mrs. Amutha Jenil Raj
20 Dr. Riamol Cibi Isaac
20 Mr. Victor Solomon
20 Miss K. Annushesys Angel
21 Master Ebi Sam Dhas
21 Mrs. Rajabhi Selwyn
21 Mr. I.Daniel George
21 Dr. Jude Sudhakar Wellington
21 Mrs. Sherly Tabitha Grace Micheal
21 Mr. Ranjith Singh
21 Mr. Stalin Prabhu
21 Master Jerolin Theo Franklin
22 Miss Sasmija Stalin
22 Mr. V.Selva Kumar
22 Master Joewin Daniel Raj Godwin
22 Master Jason Isaac Santhosh Jemil Singh
22 Master Jerry Brigin Ginesh
22 Mr. John Primson
22 Mr. Oliver Moris Purusothamaraj

23 Mr. C.Rajasekar

23 Mrs. Annee Florance Sheeba Reginald

23 Master Jaden Jason Anand

23 Mrs. Fennela Suresh

23 Mr. Sam Joe Lesly

23 Mrs. C.Subha George

23 Mr. Maher Salal J

24 Mr. Lanien Kanmani

24 Miss Dania Chrisie Mano Harrison

24 Miss Hania Stephie Mano Harrison

24 Miss Adona Praveen Charles

25 Mrs. Sukuraj Paul

25 Miss Cynolin Selvakumar

25 Mr. C.Nelson

25 Miss Felishia Enciletta Justin Robert

25 Mr. T.Charles Santha Kumar

25 Mrs. Jeeza Chrise Yesurajan

25 Master Deva Kiruba Joylin Devasahayam

25 Master Dan Adriel Oliver Moris

26 Mr. Charles Sekar

26 Mr. Ashok Daniel

26 Master Masrino Staenshua Masil

26 Mr. Ralbin Jose

26 Mrs. Stella Raguvaran Manohar

26 Mr. R.James Gnana Prakasam

27 Mrs. Starwin Solomon

27 Miss Jessica Catherene Paul Prabahar

27 Mrs. Preethi Packya Jacob Samuel

27 Master Efren Samuel Benil Thambi

27 Mr. Jobin Vedanayagam

27 Miss Jebisha Ronela Jutson

27 Mrs. Esther Priscilla Arul Prabhu

28 Mr. Benjamin Dineshkar Johnson

28 Mrs. Martha Michavel

28 Mrs. Sheeba Nirmala Andrew

28 Mrs. Sivakumari Reeta Stephen Mashach

28 Mrs. Hepzi Ananth

28 Miss Juanna Miraclyn Immanuel

29 Mrs. Agiema Gracie Tennyson

29 Master Santho Maniraj Manuel Jebaraj

29 Rev. N.Kumara Dhas

29 Master Prasan David

30 Mrs. Deepa Elizabeth Anbalagan

30 Mrs. Annie Nelson

30 Mr. Godson David

30 Miss Arun Pavithra T.

30 Mr. John Singh S.

30 Master Fernandez Jacobraj

30 Mr. George Aldreen A.

30 Master Levi Evans Dhines Kumar

30 Master Theodore Leroy Dhinesh Kumar
31 Miss Parci Gladis Anandaraj
31 Mr. Mahiban Thangadurai
31 Mr. J.Isaac Praveen Kumar
31 Miss Abbyhael Sibi Vetha Raj
31 Miss Joanna Paulyn Allben

## FUJAIRAH

1 Mrs. Ahila Satyanesam Julion Jebasingh
5 Mr. Kendric Prem Daniel Selvaraj
6 Mr. Nivin John S.
7 Miss Glorintha Jeeva Gnana Muthu
8 Mrs. Sherin Satya
8 Master Haniel Triniton Ruban Thana Singh
9 Mr. G.T.Charles
10 Mrs. Vasanthi Navaneetha Kannan
10 Mr. J.Johin Immanuel
10 Mr. S.Anish
12 Miss Benita Grace Daniel
13 Mr. C.Perinbam
13 Mr. M.Jino Aswin
14 Mrs. Kavitha Thenmozhi Stanley
15 Master Godson Daniel Rao
15 Master Robinson Durai
16 Master Benhinn Suresh
17 Mrs. Chris Evelyn Veronica Prince
18 Mr. R. Benjamin Raj
19 Master Hudson Samuel Sam Kingsley
19 Mr. Bevin Shalom Stephen
19 Master John Thomas Franklin
20 Mr. T. Samuelraj Norman
20 Miss Jaswitha Kalyana Sundar
22 Miss Delphia Godwin
24 Mrs. Cynthiya Nelson Sathya
25 Miss Mebelene Samraj
29 Mrs. Sheeba Benjamin Raj
29 Mrs. Joy Bell John Packiaraj
30 Master John David Isravel
31 Mr. B. Jaya Christopher
31 Master Caleb Daniel Ramesh Kumar

## RAS AL KHAIMAH

2 Mr. Eban Yesudian Nayagam
2 Mrs. J.Padma Priya Johnson
2 Mrs. T.Suganthi Prince
6 Mrs. Gnana Suganthi Jebaraj Joshua
7 Master P.J.Agnes G.P.R.Sam
8 Master Servan Raj
8 Mrs. J.Sherin Satya
9 Miss Mercy Deva Prakash
13 Mrs. Sathia Sheeja Rani Jayasingh David
13 Mrs. Anitha George Rose

14 Mr.Nelson Jegatheesan
14 Mrs. D.Belvin Jesilet
15 Mr. Reeves Nayagam
16 Mr. G.Daniel
16 Mr. Kelvin John
19 Miss Breety Joanna Rajesh
20 Mr. Jaya Nirmal Prasath
20 Mr. Hari Babu C.
21 Miss Remelin Rajula Regi
22 Mrs. Sheeba Prakash
23 Master Evans Henry Lawrence
23 Master R.V.Bensto
26 Mrs. Christin Jeba Latha K Johnson
26 Master Rejolin Kirupa Johnson
26 Miss Liona Gibbs
28 Miss Reshona Bernard
28 Miss Kanmani Vincent
31 Mrs. G.Jasmine Prabha Albin Jayaraj

## WEDDING CELEBRANTS - OCTOBER 2023

### DUBAI

1 Mr. & Mrs. Dass Prakash Yesubatham
3 Mr. & Mrs. Muthu Raj
4 Mr. & Mrs. Adithya Bhat
4 Mr. & Mrs. Jenil Raj
6 Mr. & Mrs. P.Anand Raja
9 Mr. & Mrs. Shajan Abrain Raj
11 Mr. & Mrs. B.Jeyakumar
13 Mr. & Mrs. R.Jebakumar
18 Mr. & Mrs. G.Paul
18 Mr. & Mrs. Derekson Daniel
18 Mr. & Mrs. S. Ashley Jude
18 Mr. & Mrs. Robin Charles Samuel Sornaraj
20 Mr. & Mrs. D.M.John Kennedy
21 Mr. & Mrs. Edwin Bright
23 Mr. & Mrs. S.John Christopher
24 Mr. & Mrs. Satish Daniel
24 Mr. & Mrs. Karuppasamy
26 Mr. & Mrs. Santha Kumar S.
27 Mr. & Mrs. Allen Kingsly
27 Mr. & Mrs. V.Jayakumar
28 Mr. & Mrs. S.Joseph Dominick
29 Mr. & Mrs. N. Gnana Sekar
30 Mr. & Mrs. Praveen Jebasingh
31 Mr. & Mrs. Theodore Kirupakaran

### FUJAIRAH

4 Mr. & Mrs. Alvin Dominic Raj
8 Mr. & Mrs. Arputharaj A.

### RAS AL KHAIMAH

12 Mr. & Mrs. Gibbs Justin
18 Mr. & Mrs. J.Regin Bernard

# ஆராதனை பாடல்கள் - அக்டோபர் 2023

ஆரம்பக்கவி : பாமாலை 134 அருள் நாதா நம்பி வந்தேன்

## 01-10-2023

| | | |
|---|---|---|
| பாமாலை | 37 | என்றென்றும் ஜீவிப்போர் |
| பாமாலை | 163 | ஆ சகோதரர் ஒன்றாய |
| கீர்த்தனை | 131 | இயேசு நேசிக்கிறார் |
| கீர்த்தனை | 5 | இயேசு நாயகனை |
| கீர்த்தனை | 197 | ஆனந்தமே ஜெயா |

## 08-10-2023

| | | |
|---|---|---|
| பாமாலை | 124 | நீர் திவ்விய வழி |
| கீர்த்தனை | 103 | எத்தனை திரள் என் |
| பாமாலை | 96 | என் முன்னே மேய்ப்பர் |
| கீர்த்தனை | 10 | சத்தாய் நிஷ்களமாய் |
| கீர்த்தனை | 119 | கிஞ்சிதமும் நெஞ்சே |
| கீர்த்தனை | 34 | சருவலோகாதிபா |

## 15-10-2023

| | | |
|---|---|---|
| பாமாலை | 137 | எந்தன் ஜீவன் இயேசுவே |
| பாமாலை | 187 | நீர் தந்த நன்மை |
| கீர்த்தனை | 128 | அன்பே பிரதானம் |
| கீர்த்தனை | 116 | ஆதாரம் நீர் தான் ஐயா |
| பாமாலை | 126 | களிகூருவோம் கர்த்தர் நம் பட்சமே |

## 22-10-2023

| | | |
|---|---|---|
| பாமாலை | 136 | என் ஆவி ஆன்மா தேகமும் |
| கீர்த்தனை | 142 | ஜெப சிந்தை எனில் தாரும் தேவா |
| பாமாலை | 117 | நல் மீட்பர் இயேசு நாமமே |
| கீர்த்தனை | 56 | இயேசுவின் நாமமே திருநாமம் |
| கீர்த்தனை | 159 | என் சிலுவை எடுத்து |
| பாமாலை | 195 | இயேசு எந்தன் நேசரே |

## 29-10-2023

| | | |
|---|---|---|
| பாமாலை | 42 | மா மாட்சி கர்த்தர் |
| கீர்த்தனை | 94 | குணப்படு பாவி |
| பாமாலை | 202 | நான் உம்மைப் பற்றி |
| கீர்த்தனை | 74 | எனது கர்த்தரின் ராஜரீக நாள் |
| கீர்த்தனை | 151 | யேசுவே கிருபாசன பதியே |
| கீர்த்தனை | 141 | கிருபை புரிந்தெனை ஆள் |

Mini Bible Character Study Book

# Faithful servant of God

PRIYA SINGH

## # 1 A FAITHFUL SERVANT IS OBEDIENT

A servant of the Lord is someone who obeys the Lord. This means serving where he directs. It also means not serving as he directs. There are many times when we feel we should take on a certain ministry because others expect it of us, (or we expect it of ourselves!), but just because an opportunity is good, doesn't mean it's ours.



### # 2 A FAITHFUL SERVANT IS HUMBLE

A servant of God has a humble attitude. True humility is not thinking less of ourselves than others, it's simply not considering ourselves at all.

### #3 A FAITHFUL SERVANT IS SACRIFICIAL

A servant of God is willing to submit their own plans, desires and rights to follow the prompting of the Holy Spirit. Going where He leads often comes at a cost, but a servant of God pays it willingly.

### # 4 A FAITHFUL SERVANTS SERVES WHERE NEEDED

Are we willing to serve where help is needed, and just only where we prefer or feel comfortable? Are we willing to serve in the quiet, unnoticeable, and often unappreciated or unacknowledged ways?

"WHEN WE SAY WE WANT TO BE THE HANDS AND FEET OF JESUS, WE MUST REMEMBER WHAT HAPPENED TO THE HANDS AND FEET OF JESUS."

# தினசரி வேத வாசிப்புப் பகுதிகள் - அக்டோபர் 2023

உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு,
என் கண்களைத் திறந்தருளும். சங்கீதம் 119:18

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 1 இராஜா. 3 | எபேசி. 1 | எசேக். 34 | சங்கீதம் 83,84 |
| 2 | 1 இராஜா. 4,5 | எபேசி. 2 | எசேக். 35 | சங்கீதம் 85 |
| 3 | 1 இராஜா. 6 | எபேசி. 3 | எசேக். 36 | சங்கீதம் 86,87 |
| 4 | 1 இராஜா. 7 | எபேசி. 4 | எசேக். 37 | சங்கீதம் 88 |
| 5 | 1 இராஜா. 8 | எபேசி. 5 | எசேக். 38 | சங்கீதம் 89 |
| 6 | 1 இராஜா. 9 | எபேசி. 6 | எசேக். 39 | சங்கீதம் 90 |
| 7 | 1 இராஜா. 10 | பிலிப். 1 | எசேக். 40 | சங்கீதம் 91 |
| 8 | 1 இராஜா. 11 | பிலிப். 2 | எசேக். 41 | சங்கீதம் 92,93 |
| 9 | 1 இராஜா. 12 | பிலிப். 3 | எசேக். 42 | சங்கீதம் 94 |
| 10 | 1 இராஜா. 13 | பிலிப். 4 | எசேக். 43 | சங்கீதம் 95,96 |
| 11 | 1 இராஜா. 14 | கொலோ. 1 | எசேக். 44 | சங்கீதம் 97,98 |
| 12 | 1 இராஜா. 15 | கொலோ. 2 | எசேக். 45 | சங்கீதம் 99-101 |
| 13 | 1 இராஜா. 16 | கொலோ. 3 | எசேக். 46 | சங்கீதம் 102 |
| 14 | 1 இராஜா. 17 | கொலோ. 4 | எசேக். 47 | சங்கீதம் 103 |
| 15 | 1 இராஜா. 18 | 1 தெசலோ. 1 | எசேக். 48 | சங்கீதம் 104 |
| 16 | 1 இராஜா. 19 | 1 தெசலோ. 2 | தானியேல் 1 | சங்கீதம் 105 |
| 17 | 1 இராஜா. 20 | 1 தெசலோ. 3 | தானியேல் 2 | சங். 106 |
| 18 | 1 இராஜா. 21 | 1 தெசலோ. 4 | தானியேல் 3 | சங். 107 |
| 19 | 1 இராஜா. 22 | 1 தெசலோ. 5 | தானியேல் 4 | சங். 108,109 |
| 20 | 2 இராஜா. 1 | 2 தெசலோ. 1 | தானியேல் 5 | சங். 110,111 |
| 21 | 2 இராஜா. 2 | 2 தெசலோ. 2 | தானியேல் 6 | சங். 112,113 |
| 22 | 2 இராஜா. 3 | 2 தெசலோ. 3 | தானியேல் 7 | சங். 114,115 |
| 23 | 2 இராஜா. 4 | 1 தீமோ. 1 | தானியேல் 8 | சங். 116 |
| 24 | 2 இராஜா. 5 | 1 தீமோ. 2 | தானியேல் 9 | சங். 117,118 |
| 25 | 2 இராஜா. 6 | 1 தீமோ. 3 | தானியேல் 10 | சங். 119:1-24 |
| 26 | 2 இராஜா. 7 | 1 தீமோ. 4 | தானியேல் 11 | சங். 119:25-48 |
| 27 | 2 இராஜா. 8 | 1 தீமோ. 5 | தானியேல் 12 | சங். 119:49-72 |
| 28 | 2 இராஜா. 9 | 1 தீமோ. 6 | ஓசியா 1 | சங். 119:73-96 |
| 29 | 2 இராஜா. 10 | 2 தீமோ. 1 | ஓசியா 2 | சங். 119:97-120 |
| 30 | 2 இராஜா. 11,12 | 2 தீமோ. 2 | ஓசியா 3,4 | சங். 119:121-144 |
| 31 | 2 இராஜா. 13 | 2 தீமோ. 3 | ஓசியா 5,6 | சங். 119:145-176 |